RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/ irjt22137

# நாயன்மார் பக்தியின் வழியில் பெண் நிலை

மீ. சுதா [அ]

[அ] தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய, நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்-624302, தமிழ்நாடு, இந்தியா

# Position of Woman in Way of Nayanmar Bhakti

M. Sudha [a, *]

[a] Department of Tamil, Gandhigram Rural Deemed to be University, Gandhigram-624302, Tamil Nadu, India.

* Corresponding Author:
sudhavenkatesh15@gmail.com

Received: 27-11-2021
Revised: 18-01-2022
Accepted: 23-01-2022
Published: 30-01-2022

Check for updates

**ABSTRACT**

When we think of Bhakti literature, what comes to mind is the Periyapuranam which glorifies the Saivas. The Saiva service of 63 Nayanmars is well documented in the Periya Puranam. The devotional spirit of the devotees who have offered their body, material and spirit to Lord Shiva is expressed. In the Periya Puranam of the medieval period, the Puranam records the elevation of various devotees as Shiva devotees irrespective of their caste and place. However, it is noteworthy that the Periyapuranam also records the condition of women who constitute half of the society in medieval times. In this way, women have been doing their work from different levels as the wife and daughter of the devotees and not as solitary worshippers and worshiping their Lord Shiva voluntarily. It is noteworthy that Periyapuranam also records the situation in which people like Karaikkal Ammaiyar had to separate from their spouse when they came forward to do it alone.

**Keywords:** Status of women, Karaikkalammaiyar, Periyapuranam, Feminization

## முன்னுரை

பக்தி இலக்கியம் என்றதும் மனதிற்கு வருவது சைவர்களின் புகழை பறைசாற்றும் பெரியபுராணம். பெரியபுராணத்தில் 63 நாயன்மார்களின் சைவத் தொண்டு சிறப்புடன் எடுத்து இயம்பபட்டுள்ளது. உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் சிவனுக்கு அர்ப்பணம் செய்த அடியவர்களின் பக்தி உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் தாயாக, மனைவியாக, மகளாக மற்றும் அவர்களது சுற்றத்தினர் ஆக வாழ்ந்த பெண்களின் நிலை, மனநிலை பதிவு செய்யப்படவில்லை. அவ்வாறு பதிவு செய்யப்படாத அவர்களின் மனநிலையை காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சமூகத்தில் பெண்களின் நிலை

ஆணும் பெண்ணும் சமமாக இணைந்து வாழ்வதுதான் சமூகமாகும். அச்சமூகத்தில் பால் வேறுபாடு காரணமாக எந்தவித கட்டுப்பாடுகளும் நிர்ணயிக்கக் கூடாது. ஆனால் 2000 ஆண்டுகளுக்கு மேலாக ஆண் சமூகத்தின் அதிகாரத்தின் உச்சத்தில் இருந்து வருகிறான். ஒழுக்கம் கடமை இல்லறநெறி ஆகிய அனைத்திலும் அவன் தனக்கென சில சலுகைகளையும் வரையறைகளையும் உண்டாக்கி பெண் இனத்தை அதற்கு இணங்க செய்து வாழ்ந்து வருகிறான். அவர்களை பெண்

குலத்திற்கே அவமானமாகவும் பெண்கள் தாங்களாகவே ஏற்கும் படியாகவும் மூளைச்சலவை செய்துள்ளான்.

"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"

என தலைவனை தலைவிக்கு உயிரை போன்றவராக தோழி கூற்று குறுந்தொகையில் பதிவு செய்கிறது (Parimanam & Balasubramaniyam, 2004). கணவனுக்கு கட்டுப்பட்டவள் தான் மனைவி கணவன் கொடுமை படுத்தினாலும் அவனுடன் கூடியிருந்து தான் வாழவேண்டும். அவளே உண்மையான மனைவி என்ற கொள்கை ஆண்களிடம் காலம் காலமாக இருந்து வருகிறது. இந்நிலையை இப்பாடலில் வழி அறியலாம். பக்தி என்பது ஆண் பெண் இருவருக்கும் வேறுபட்டுள்ளது இதனை, "பக்தி இயக்கம் சார்ந்த ஆண், பெண் துறவிகளிடையே பல வேறுபாடுகளை காணலாம். ஆண் துறவிகள் மனமாற்றம் பெற்றுக் கடவுளை காண வேண்டும். ஆனால், பெண் பக்தர்கள் தொடக்கத்திலிருந்தே கடவுள் அன்பு கொண்டவர்கள். மனித ஆணை மணக்க நேர்ந்தாலும் உண்மைக் கணவன் கடவுள்தான்" என்கிறார் அ.மங்கை

## பெண் நாயன்மார்களின் தனிச்சிறப்பு

இறைவனை வழிபடுவதில் ஆண் பெண் பேதமில்லை. ஆண்களுக்கு சேவை செய்வது மட்டுமே தனது படைப்பின் நோக்கம் என்று நினைத்து வாழ்ந்து வந்த சமூகத்தில் கடவுளையே தனது உலகமாக கருதி வாழ்ந்து சிறப்பு பெற்றவர்கள் பக்தி இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் திலகவதியார் காரைக்கால் அம்மையார் மற்றும் மங்கையர்கரசி ஆவார்.

## பேயர் அல்லது காரைக்கால் அம்மையார்

புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் அவதரித்தவர். இவரது இயற்பெயர் புனிதவதியார் சிறுவயது முதலே சிவத்தொண்டு புரிந்து கொண்டவர். திருமணத்திற்குப் பிறகும் சிவசிந்தனை குறையாது வாழ்ந்து வந்தார். ஒருநாள் இவருடைய கணவர் பரமதத்தன் தேடி வந்த நபர் இரு மாங்கனிகளை கொடுக்க அதில் ஒன்றை புனிதவதியார் சிவனடியாருக்கு கொடுத்து உணவளித்தார். பரமதத்தனுக்கு மீதியுள்ள ஒரு மாங்கனியை வைத்து உணவு பரிமாற அவர் மற்றொரு கனியையும் கேட்க செய்வதறியாது திகைத்த புனிதவதி இறைவனைச் சரண் அடைந்தார். அவரின் பக்தியை கண்டு இறைவன் ஒரு கனியை தந்தார். அதை உண்ட பரமதத்தன் சுவை அப்பழத்தின் சுவை அதிகமாக இருப்பதை உணர்ந்த அவன் அப்புறம் அதற்கான உண்மையான காரணத்தை தன் மனைவியிடம் கேட்கிறார். அவள் நடந்ததை கூற மனைவியின் தெய்வீக தன்மையை உணர்ந்து மறுமணம் செய்து கொள்கிறான். கணவன் மறுமணம் புரிந்த செய்தியை கேட்ட புனிதவதியார் தன் கணவனைக் காண செல்கிறார். அவனும் தன் புதிய மனைவியுடன் புனிதவதியின் காலில் விழுந்து வணங்குகிறான்.

'மானுடம் இவர்தாம் அல்லர்

நற்பெருந் தெய்வம் ஆதல்

நான் அறிந்து அகன்ற பின்பு

பெற்றஇம் மகவு தன்னைப்

பேரிட்டேன் ஆதலாலே

பொற்பதம் பணிந்தேன்

நீரும் போற்றுதல் செய்மின்' என்றான் (Sekkilhar, 2009).

இதைக்கேட்டு வாழ்வை வெறுத்து ஈசனை வேண்டி பேய் உருவம் பெற்று மேலும் தலையாலே நடந்து திருவாலங்காடு சென்று ஈசனும் உமாதேவியும் நடனம் புரியும் காட்சியைக் கண்ட ஈசனாரால் 'அம்மையே'! என்று அழைக்கப்பெற்றார். இவரது வாழ்க்கை திருமணத்திற்கு முன்பு தந்தையுடனும் பின்பு கணவனுடனும் பிணைந்திருக்கிறது. இருப்பினும் தனக்கென ஒரு பக்தி நெறியை கடைப்பிடித்து வந்தார். பக்தியின் அருளால் அவரது இல்லற வாழ்வில் விரிசல் ஏற்பட்ட பொழுது சிறிதும் மனம் கலங்காமல் மீண்டும் இல்லற வாழ்வே வேண்டும் என்று நினையாமல் ஈசனின் அருள் வேண்டும் என வரம் பெற்று சிறப்பு பெற்றார். "அன்று, பெண்களுக்குத் தங்கள் பக்தி நியமத்தை வெளிப்படுத்தும் விதங்களாக கோயிலை பெருக்குதல், சாணியால் மெழுகுதல், பூத்தொடுத்தல், கோலம் போடுதல், உற்சவ நேரங்களில் ஆடுதல், பாடுதல் ஆகியவை தான் காணப்படுகின்றன. புனிதவதி பாடினாள் திலகவதி கூட்டிப் பெருக்கிச் சாணியால் மெழுகுகிறாள்" என்று ராஜ்கௌதமன் கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது (Raj Gowthaman, 2019).

## மங்கையர்க்கரசியார்

கும்பகோணத்திலிருந்து பட்டிஸ்வரம் செல்லும் வழியில் அமைந்துள்ள பழையாறை வடதளி எனும் ஊரில் அவதரித்த மங்கையர்க்கரசியார் பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை மணந்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார். அச்சமயத்தில் நெடுமாறன் சமணர்களால் மன மாற்றம் செய்யப்பட்டு சமண மதத்தைப் பரப்பி வந்தார். சைவ மரபில் தழைத்து ஓங்கிய மங்கையர்க்கரசியார் தன் கணவரை மீண்டும் சைவ மதத்திற்கு வரச் செய்ய முயற்சித்தார் எனினும் பயன் இல்லை. ஆயினும் தன்னால் இயன்ற அளவு சிவனடியார்களுக்கும் சிவாலயங்களுக்கும் தொண்டு புரிந்து வந்தார். அந்நிலையில் திருஞானசம்பந்தர் மன்னர் மாளிகைக்கு வர மங்கையர்க்கரசியார் அன்புடன் வரவேற்று கணவன் நெடுமாறனை சந்திக்க வைத்தார். சம்பந்தரது தத்துவ விளக்கத்தையும் உரையாடல்களையும் கேட்டு நெடுமாறன் அதைவிடுத்து மனம் மாறி சைவம் தழைத்து ஓங்க பாடுபட்டார். தனது கணவரை சைவமாக மாற்றிய அருளினால் மங்கையர்க்கரசியாரும் நாயன்மாராக போற்றப் பெற்றார். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பதை உணர்ந்த மங்கையர்க்கரசி தனது கணவனை சைவ சமயத்திற்கு மாற்ற பெரிதும் முயற்சித்தார். தான் தொழுது வந்த சமயத்திற்கு அரசரை வரச் செய்த சிறப்பு அவரையே சாரும்.

## பெண் பொருளாக பார்க்கப்படல்

உலக உயிர்களின் தோற்றத்திற்கு காரணமாக இருப்பவள் தான் பெண். அப்பெண்ணின் உணர்வுக்கு மதிப்பு கொடுத்து வாழும் போக்கு நமது சமூகத்தில் இன்று வரை முழுமை பெறாத ஒன்றாக இருக்கின்றது. அவ்வகையில் பெண் போகப் பொருளாகவும் அடிமையாகவும் அசையும் சொத்தாக கருதப்படுகிறாள். மனைவியாக இருப்பவள் கணவனின் இச்சை தீர்க்கும் கருவியாகவும் குழந்தை பெற்றுத் தரும் இயந்திரமாக இருக்கிறாள். அவளுக்கு என்று ஒரு கருத்து உணர்வு செயல் ஆகியன இல்லாது இருப்பதை இயற்பகை நாயனாரின் மனைவியின் வாயிலாக உணரமுடிகின்றது.

## இயற்பகை நாயனார்

சோழநாட்டின் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்தவர். இயற்பகை நாயனார் சிவனடியாருக்கு எதையும் மறுக்காமல் கொடுக்கும் வண்ணம் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் இறைவன் அடியவராக வேடம் பூண்டு இயற்பகை நாயனாரின் இல்லத்திற்கு சென்று பின்வருமாறு வேண்டுகிறார்.

'மன்னுகாதல் உன் மனைவியை வேண்டி

வந்தது இங்கே' (பா. 410) என வேதியர் கேட்க,

'விதி மணக் குலமடந்தை இன்று உனைஇம்

மெய்த்த வருக்கு நான் கொடுத்தனன்' (பா. 411)

என்கிறார். அடியவர் வேண்டியது தனது மனைவியை என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் அடிகள் என்னிடம் உள்ள பொருளையே நாடியது எனது புண்ணியப் பயன் எனக் கூறி அகம் மகிழ்ந்தார். திருமணம் என்பது ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வந்த இரண்டு உயிர் ஒன்றி அன்பால் முதன்மை பெறுவது ஆகும். இவ்விடத்தில் பெண் உயிரியாக கருதப்படாமல் வெறும் பொருளாக கருதப்பட்ட காரணத்தினால் தான் இயற்பகை நாயனார் அடியவரிடம் தனது மனைவியை ஒப்படைக்க சம்மதித்தார். அவரது சுற்றத்தாரும் அசையும் சொத்தாக கருதி அவருடன் செல்ல அனுமதி மறுக்கின்றனர். இறைவனோ இயற்கையின் தொண்டினை உலகுக்கு உணர்த்த நினைத்தாலும் அவரது மனைவியும் ஒரு உயிர் என்பதை நினைக்கத் தவறி பொருளாக பாவித்த தன்மையை அறிய முடிகிறது.

## திருநீலநக்க நாயனார்

சாத்தமங்கை என்னும் ஊரில் அயவந்தி என்னும் சிவ ஆலயத்தில் வீற்றிருக்கும் இறைவனை வணங்க திருநீலநக்கரும் அவரது மனைவியும் சென்றனர். அங்கு பூஜை செய்யும் வேலையில் சிலந்தி ஒன்று அயவந்தி நாதர் மீது விழ அதை கவனித்த திருநீலநக்கரின் மனைவி குழந்தை மேல் சிலம்பி விழுந்ததால் அது எப்படி ஊதி துடைப்போம். அப்படியே சிவலிங்கத்தின் மீது விழுந்த சிலந்தியை ஊதித் தள்ளினார். இதைக் கண்ட நீலநக்கர் மனம் கொதித்து அவரை தன்னுடன் வாழ தகுதியற்றவர் என கூறி அடாது செய்த உன்னை துறந்தேன் என்னைவிட்டு நீக்குவாயாக என்றார். அம்மையார் கோவிலில் இரவு தங்கினார். அன்றிரவு இறைவன் நீல நக்க நாயனார் கனவில் தோன்றி உண்மையை எடுத்துக் கூறி மனைவியுடன் வாழ செய்கிறார்.

“ஆதி நாயகர் அயவந்தி

அமர்ந்த அங் கணர்தம்

பாத மூலங்கள் பணிந்து வீழுந்து

எழுந்து முன் பரவி

மாதராரையும் கொண்டு தம்

மனையில் மீண்டு அணைந்தார்” (பா. 1852)

என்ற வரிகளின் மூலம் திருநீலநக்கரின் சிவதொண்டு புலனாகிறது. ஆயினும் நாயனாரின் மனைவியின் சிவத்தொண்டு ஏற்றுக்கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் சிறிது முயற்சி செய்யாமல் மனைவி செய்த தவறு என்று கணவன் உணரும் இடத்தில் அவளை அதே இடத்தில் விட்டுச்செல்லும் அவலத்தையும் உணரமுடிகின்றது. இங்கு ஆண்மகனின் பக்தி உணர்வை முதன்மைப்படுத்தப்படுகிறது. பெண்ணானவள் ஆணின் தேவைகளைத் தீர்த்து வைக்கும் சேவையாக மட்டுமே பார்க்கப்பட்ட நிலையை உணர முடிகின்றது.

## மானக்கஞ்சாற நாயனார்

ஆனந்த தாண்டவபுரம் என்னும் கஞ்சனூரில் அவதரித்த சேனாதிபதி மானக்கஞ்சாற நாயனார் பிள்ளைப்பேறு இல்லாமல் இருக்கவே மனம் வருந்தி இறைவனை வேண்டி ஒரு அழகிய பெண் குழந்தையை பெற்று, அக்குழந்தை பருவமெய்திய உடனேயே நாயனாருக்கு மணம் முடிக்க ஏற்பாடு செய்தார். பொழுது விடிந்தால் திருமணம் என்ற நிலையில்,

“தம் சரணத்து இடைப் பணிந்து

தாழ்ந்த எழுந்த நடக்குடிதன்

மஞ்சு தழைத்து என வளர்ந்த

மலர்க் கூந்தல் புறம் நோக்கி

அஞ்சலி மெய்த் தொண்டரைப் பார்த்து

அணங்கு இவள்தன் மயிர் நமக்குப்

பஞ்சவடிக்கு ஆம் என்றார்" (பா.899)

மகளின் திருமணத்தை விட அடியவரின் வேண்டுகோளையும் விருப்பத்தையும் நிறைவேற்ற தலையாய கடனாக கருதுகிறார் மானக்கஞ்சாற நாயனார். திருமண கனவுகளுடன் இருக்கும் மக்களின் மனநிலையை உணராது தனது லட்சியத்தை மட்டுமே முடிக்க நினைக்கும் சுயநலமான ஒரு ஆணின் மனநிலை இங்கு காட்சிப்படுத்தப்படுகிறது.

## சுந்தரர்

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரில் ஆதி சைவ மரபில் தோன்றிய சடையனார் இசைஞானியார் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். நம்பியூரர் என பெயரிட்டு பெற்றோர் சுந்தரரை அழைத்து வந்தனர். சுந்தரரின் அழகில் மயங்கிய அந்நாட்டு மன்னராகிய நரசிங்க முனிவர் இவரை தத்தெடுத்து வளர்த்து வந்தார். நம்பியூர் திருமணப் பருவத்தை அடைந்த நிலையில் புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் என்பவரின் மகளை நிச்சயம் செய்தனர். திருமணப் பந்தலில் மணக்கோலத்துடன் இருந்த நம்பியூரர் அவரை பார்த்து அந்தணர் வேடத்தில் இருந்த சிவபெருமான் தங்களுக்கு இடையில் ஒரு வழக்கு இருப்பதாக கூறினார். நம்பியூரரும் அவரது வம்சத்தினரும் தனக்கு அடிமை என்று கூறினார் என வழக்கை தொடுத்தார். இதன் காரணமாக நம்பியூர் திருமண பந்தலை விட்டு வெளியேறினர். வழக்கின் முடிவில் வந்தவர் சிவபெருமான் என்று உணர்ந்த நம்பியூர் தனது அறியாமையை அறிந்தார். இறைவனை தொழுது அவரின் உற்ற தோழரான பிறகு பரவையார், சங்கிலியார் என இரு பெண்களை இறைவனின் அருளாலும் உதவியாலும் மணந்துகொண்டு சிவத்தொண்டு ஆற்றினார். நம்பியூரர் இறைவனால் தடுக்க பெற்று சிவத்தொண்டு புரிந்தார் என்பது மட்டுமே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதில் மறைக்கப்பட்ட ஒன்று உண்டு. யாதெனில் மணப்பந்தல் ஏறிய சடங்கவி சிவாச்சாரியார் மகளின் நிலையாகும். மணமேடையேறிய பெண்ணுக்கு மீண்டும் மறுமணம் நடந்தேறுதல் என்பது இன்றைய நவீன பெண்ணுக்கு சற்று சிரமமான சூழலாக தொடர்ந்து வருகிறது. சடங்கவி சிவாசாரியார் புதல்வியும் அடுக்களை தவிர்த்து வேறு எங்கும் செல்ல அனுமதி வழங்காத காலகட்டத்தில் வாழ்ந்தவள் அவளின் திருமணத்தன்று நடந்தேறிய தடுத்தார்கள் உலகிற்கு சிறந்த நாயன்மாரும் இறைவனுக்குs தோழரும் கிடைத்து இருக்கலாம். ஆனால் ஊராரும், மணம் நின்று போன பெண்ணின் எதிர்காலம் குறித்தும் இறைவனும் சிந்திக்கவில்லை. அவனைப் பிடிக்க இருந்த நம்பியாரும் சிந்திக்கவில்லை. தடுத்தல் நிகழ்வு நிறைவு பெற்றபின் நம்பியூர் அவளை மணந்து இருக்கலாம் அல்லது அவளுக்கு வேறு ஒரு ஆணுடன் மணம் புரிந்த நிகழ்வது சூட்டப்பட்டிருக்கலாம். இவை எதுவுமே நிகழவில்லை. மூச்சு விடும் பாவையாக மட்டுமே கருதப்பட்ட அவலம் இங்கு சத்தமின்றி அரங்கேறியது உணரமுடிகின்றது. சங்கிலியாரை மணந்ததால் பரவையார் கோபம் கொண்டு நம்பியூரரை கண்டால் உயிர் விடுவேன் என்று உரைத்தார். இச்செய்தியை அறிந்து தனது தோழன் நம்பியூர் அருகே தூது சென்றார் இறைவன். இறைவனின் தூதர் மனம் மகிழ்ந்த பரவையார், மனம் மாறி தனது கணவனை ஏற்றுக் கொண்டு இல்லறம் நடத்தினார். இறைவனின் படைப்பில் உயர்வு, தாழ்வு ஏற்றம், இறக்கம் என்பன போன்ற பாகுபாடு இல்லை என்று கூறப்பட்டு வருகிறது. இது உண்மையெனில் சுந்தரரின் மனநிலையை உணர்ந்து தூது சென்ற இறைவனுக்கு மணமேடையில் தவித்து நின்ற சடங்கியார் புதல்வியின் மனநிலை உணராது போனது ஏனோ? என்ற வினா எழும்புதல் இயற்கை அன்றோ? படைப்பில் பாகுபாடு இல்லை எனில் சடங்கவி புதல்விக்கு நன்மை செய்தல் இறைவனின் கடமை தவற காரணம் இவ்விடத்தில் இறைவனாக இருந்தது ஒரு காரணமே ஆகும்.

## முடிவுரை

இடைக்காலத்தில் எழுந்த பெரிய புராணத்தில் பல்வேறு அடியார்களின் சாதி இடப் பேதம் இன்றி பல்வேறு அடியார்கள் சிவனடியார்களாக உயர்ந்ததாக புராணம் பதிவு செய்கிறது. எனினும் சமூகத்தில் சரிபாதியாக உள்ள பெண்களின் நிலை என்னவாக இருந்தது என்பதையும் பெரியபுராணம் இடைக்காலத்தில் பதிவு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பெண்கள் தன் இறைவனான சிவபெருமானை வழிபடும்போதும் தனித்து நின்று தாமாக முன்வந்து வழிபாடு செய்பவர்களாக அல்லாமல் அடியார்களின் துணைவியாக மகளாக பல்வேறு நிலைகளில் இருந்தே தம் பணியை செய்து வந்திருக்கின்றனர். காரைக்கால் அம்மையார் போன்றோர் தனித்து அதை செய்ய முன்வந்த போது, அவர்கள் வாழ்க்கை துணையை பிரிய வேண்டிய சூழலையும் பெரியபுராணம் பதிவு செய்வது குறிப்பிடத்தக்கது.

## References

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Raj Gowthaman, (2019) Dalit Panpadu, Paavai Printers, Chennai, India

Sekkilhar, (2009) Periyapuranam, Varthaman Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License